**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி.</u>**

**<u>அசல் வழக்கு எண். 65 /2022</u>**

பெயர் : ரெத்தினகுமார் P.W.1.

த/பெ. : கணேசன்

தேதி : 19.06.2025

சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி:–</u>**

தன்ராஜ் என்பவரின் பெயரில் ஏற்பட்ட கிரய பத்திரத்தை நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. தன்ராஜ் என்பவரின் கிரய முன்னவர்களின் தந்தையான சாமிதுரை என்பவரின் பெயரில் தான் தாவா சொத்திற்கான பட்டா இருந்தது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்திற்கான பட்டா யார் பெயரில் இருந்தது என்பதை வருவாய் துறை ஆவணங்களை பார்த்து தெரிந்துகொண்டேனா என்றால் இல்லை. சாமிதுரையின் மகன்கள் தெட்சிணாமூர்த்தி, ஜெயராமன், பாலசுந்தரம் ஆகியோர் பாகம் பிரித்துகொண்டு தனித்தனியாக தாவா சொத்தை அனுபவித்து வந்தார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. தெட்சிணாமூர்த்தி என்பவரின் பாகத்தையும் சேர்த்து கிரயம் செய்ய ஜெயராமனுக்கும் பாலசுந்தரத்தின் மனைவி விஜயராணிக்கும் எவ்வித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. 3 நபர்களுக்கு உரிமையான தாவா சொத்தை 2 நபர்கள் மட்டும் தன்ராஜுக்கு கிரயம் செய்துள்ளது செல்லாது என்றால் சரியல்ல. அதன் அடிப்படையில் தன்ராஜ் ஜானகிக்கு கிரயம் செய்ததும், ஜானகி எனக்கு கிரயம் செய்ததும் செல்லாது என்று சொன்னால் சரியல்ல. அந்த செல்லாத கிரய ஆவணத்தின் அடிப்படையில் எனது பெயரில் பட்டா மாற்றம் செய்துள்ளது சட்டப்படி செல்லத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. அதனால் நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ 3 மற்றும் வா.சா.ஆ.4 ஆவணங்கள் செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. சரியான உரிமை மூலத்தின் அடிப்படையில்தான் நான் சொத்தை கிரயம் பெற்றுள்ளேன் என்பதை நிரூபிக்க தன்ராஜ் மற்றும் ஜானகி ஆகியோரை எனது தரப்பு சாட்சியமாக விசாரிக்க முடியுமா என்றால் விசாரிப்பதற்கு முயற்சி செய்கிறேன். தாவா சொத்தின் உண்மை உரிமை மூலம் தெரிந்துவிடும் என்பதால்தான் தன்ராஜ் பெயரில் ஏற்பட்ட ஆவணத்தை தாக்கல் செய்யாமல் மறைத்துள்ளேன் என்றால் சரியல்ல. ஜானகியின் கணவர் ராமச்சந்திரன் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து ஓய்வு பெற்றவர் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. தற்போது ஜானகி

மயிலாடுதுறையில்தான் வசித்து வருகிறார் என்றால் சரிதான். தன்ராஜ் காரைக்கால் கோட்டுச்சேரியில் வசித்து வருகிறார் என்றால் சரிதான். தாவா சொத்து எனது வசத்திலும் அனுபவத்திலும் உள்ளது என்பதை காண்பிப்பதற்கு வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.4 வரையிலான ஆவணங்களை தவிர வேறு ஆவணங்கள் எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அனுபவத்திற்கான ஆவணங்களை நான் தாக்கல் செய்யாததால் நான் கோரிய பரிகாரங்கள் எனக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் மேற்குபுறமாக தார் சாலையை ஒட்டியுள்ள 1/3 பாகம் சொத்து தெட்சிணாமூர்த்தியின் வாரிசுகள் என்ற அடிப்படையில் பிரதிவாதிகளின் வசம் உள்ளது என்றால் சரியல்ல. அந்த சொத்தையும் சேர்த்து நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோருவதற்கு எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்து முழுவதும் எனது அனுபவத்தில்தான் உள்ளது. தாவா சொத்தை அனுபவித்து வருவது சம்மந்தமாக எனக்கும் பிரதிவாதிகளுக்கும் பிரச்சனை ஏற்பட்டு காவல் துறையில் இருதரப்பினராலும் புகார் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். அந்த புகாரின் அடிப்படையில் இருதரப்பினரையும் அழைத்து பேசினார்கள் என்றால் சரிதான். அப்போது இருதரப்பினரையும் நீதிமன்றத்தினை அணுகுமாறு காவல்துறையினர் அறிவுறுத்தி அனுப்பினர் என்றாலும் அதன் அடிப்படையில்தான் நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களின் படி தாவா சொத்து முழுவதும் எனக்கு உரிமையானது அல்ல என்றாலும் அதன் அடிப்படையில் நான் கோரும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரமும் எனக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. அதனால் நான் தாக்கல் செய்துள்ள வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டியது என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை**